★ ஐஸ்கிறீம் வகைகள்
★ பாலூத்தா சர்பத்
★ மிக்ஸ் ஜூஸ்க்கும்
செந்தாமரை
(றிக்கோ)
குளிர் தடாகம்
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

குளி...
கோப்பியை... பெற்றுக்கொ...
செந்தாமரை
(றிக்கோ)
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 10 சனிக்கிழமை (26 — 11 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 367

புலிகளின் குரல் வானொலியில்

## தலைவர் பிரபாகரன் இன்றிரவு உரையாற்றுவார்

மாவீரர் நாளை ஒட்டி தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் இன்று இரவு சரியாகப் 11.48 மணிக்கு புலிகளின் குரல் வானொலி மூலம் உரையாற்றவுள்ளார்.

இதனை முன்விட்டு புலிகளின் குரல் வானொலிச் சேவை இன்று இரவு 9 மணி முதல் நள்ளிரவு 12.30 மணி வரை நீடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

புலிகளின் குரல் வானொலியில், நள்ளிரவு 12 மணிக்கு மாவீரர் நினைவை அனுஷ்டிப்பதற்கான மணி ஒலியும்—தொடர்ந்து 12 மணி 2 நிமிடத்துக்கு மாவீரர் துயிலும் இல்லப் பாடலும்—ஒலிபரப்பாகும்.

மாவீரர்நாள் சிறப்பு நிகழ்ச்சிகள், கவிச்சித்திரம், வில்லிசை, இசையரங்கம் என்பனவும் இன்றிரவு இடம் பெறும். (ஐ)

## மாவீரர் துயிலும் இல்லம் செல்வதற்கு ஒழுங்குகள்

யாழ்ப்பாணம், நவ. 26

மாவீரர் நாளை முன்னிட்டு இன்று நள்ளிரவு கோப்பாயில் உள்ள வலிகாமம் பிரிவு மாவீரர் துயிலும் இல்லத்தில் இடம்பெறும் ஈகைச் சுடர் ஏற்றும் நிகழ்வுகளை ஒட்டி —மக்களின் வசதி கருதி— 'பாக்குவரத்து மற்றும் சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிவுறுத்தல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:—

★ அஞ்சலி செலுத்தவரும் பொதுமக்களும், போராளிகளும் இன்றிரவு 8 மணிக்கு முன்னரும் 11.30 மணிக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழத்தேசியத்தலைவர் திரு.வே.பிரபாகரனுக்கு இன்று அகவை நாற்பது நிறைவெய்துகின்றது. அவர் பல்லாண்டு பயன் கண்டு நீடூழி வாழியவே!

## மாவீரரின் பெற்றோர் இன்று கௌரவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 26

மாவீரர் நாளை ஒட்டி மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நாள் இன்றாகும்.

யாழ். மாவட்டத்தில் வசிக்கும் மாவீரர் பெற்றோர்கள் இன்று பிற்பகல் 2 மணி முதல் 13 கௌரவிப்பு நிலையங்களுக்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளனர்.

வட்டவை ரீதியாக அமைக்கப்பட்டுள்ள கௌரவிப்பு நிலையங்களின் விவரம் வருமாறு?–

★ யாழ். வட்டம் — யாழ். இந்துக் கல்லூரி.

★ நல்லூர் வட்டம் — கனகரத்தினம் ம.ம.வி.

★ கோப்பாய் வட்டம் — கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை.

★ உடுவில், தெல்லிப்பளை வட்டம் — மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி.

★ சண்டிலிப்பாய் வட்டம் மானிப்பாய் மெமோரியல் கல்லூரி.

★ சங்கானை வட்டம் — வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.

★ கைதடி வட்டம்—முத்துக்குமாரசாமி வித்தியாலயம்.

★ சாவகச்சேரி வட்டம்— சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

★ கொடிகாமம், பளை வட்டம் — உசன் இராமநாதன் கல்லூரி.

★ பருத்தித்துறை வட்டம் — புற்றளை மத்திய ம. வி.

★ கரவெட்டி வட்டம்— ஞானாசிரியார் கல்லூரி.

★ உடுப்பிட்டி வட்டம்— நெல்லியடி ம ம. வி.

★ தீவகக் கோட்டம்— யாழ். இந்து மகளிர் கல்லூரி.

யாழ். மாவட்டத்தில் வசிக்கும் சகல மாவீரர்களின் பெற்றோர்களையும் இன்று பிற்பகல் 4 மணிக்கு முன்னராக தத்தமது வட்டங்களுக்குரிய கௌரவிப்பு நிலையங்களுக்கு சென்று சேருமாறு யாழ். மாவட்ட அரசியல்துறையினர் அன்புடன் அழைப்பு விடுத்துள்ளனர். (ஐ)

## பலாலியில் தங்கி நிற்கும் செய்தியாளர்கள்

யாழ்ப்பாணம் வருவதற்காக விமான மூலம் பலாலி வந்த பி. பி. ஸி. மற்றும் ரோய்ட்டர் செய்தியாளர்கள் பலாலியில் தங்கியிருப்பதாக நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது

காங்கேசன் துறைக்கும், பருத்தித்துறைக்கும் இடையில் இணைப்பு கப்பல் சேவை இல்லாத காரணத்தால் அவர்கள் பலாலியில் தங்கவேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## 58 அதிகப்படி வாக்குகள்

அரசாங்கத்தின் இடைக்கால கணக்கு அறிக்கை நாடாளுமன்றத்தில் நேற்று 58 அதிகப்படியான வாக்குகளால் நிறைவேறியது.

1995 ஆம் ஆண்டு முதல் மூன்று மாத காலப்பகுதிக்கு 4 ஆயிரத்து 779 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆதரவாக 130 உறுப்பினர்களும், எதிர்த்து 72 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

## ஈ.பி.டி.பி.யினர் பொலிஸாரை மிரட்டினராம்

வெள்ளவத்தைப் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த குற்ற பலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் சிலர் கொழும்பில் உள்ள ஈ.பி.டி.பி தலைமையகத்தில் வைத்து ஈ.பி.டி. பி உறுப்பினர்களால் அச்சுறுத்தப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஈ.பி.டி.பி அமைப்பில் இருந்து விலகிச் சென்ற இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து விசாரிக்கச் சென்ற சமயமே அவர்கள் அச்சுறுத்தித் திருப்பி அனுப்பப்பட்டனர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

# இன்று நள்ளிரவில் மணிகள் ஒலிக்க சுடர் ஏற்றலுடன் மாவீரருக்கு அஞ்சலி

## துயிலும் இல்லங்களில் விசேட அஞ்சலி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவம்பர் 26

கடந்த ஒருவார காலமாக தமிழீழ மக்களால் உணர்வு பூர்வமாகவும் — எழுச்சி பொங்கவும் அனுஷ்டிக்கப்பட்டு வரும் மாவீரர் வாரத்துக்கு சிகரம் வைக்கும் சிறப்பு நிகழ்வு இன்று நள்ளிரவு நடைபெறவுள்ளது. இன்று நள்ளிரவு 12 மணி ஒரு விநாடிக்கு சமகாலத்தில் அனைத்து ஆலய, தேவாலய மணிகளும் இரண்டு நிமிடங்களுக்கு நினைவொலி எழுப்ப தமிழீழத் தேசிய நாளான மாவீரர் நாள் ஆரம்பமாகிறது.

மாவீரர் நினைவு ஒலி எழுப்பப்படும் நேரத்தில் மக்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன வணக்கம் செலுத்துவர். 12 மணி 2 நிமிடம் வரை மௌன வணக்கம் இடம்பெறும். அப்போது வீதிகளில் செல்பவர்களும், வாகனங்களில் செல்வோரும் அங்கே தரித்து விட்டும் மௌன வணக்கத்தில் ஈடுபடுவர்.

**சுடரேற்றல்**

மாவீரர் நினைவொலி நிறைவு பெற்றதும் சுடரேற்றும் நிகழ்வு ஆரம்பமாகும்.

கோட்ட ரீதியாக உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர்களின் பெற்றோர்களும் உறவினர்களும் சுடரேற்றுவர். அவ்வேளை பொது இடங்களிலும் பாடசாலைகள், வீடுகள், வர்த்தக நிலையங்கள் போன்ற இடங்களிலும் மக்கள் மாவீரர் சுடர் ஏற்றுவர்.

தொடர்ந்து மாவீரர் துயிலும் இல்லங்களில் உள்ள

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல்கள் மூன்றும் காங்கேசனில் தரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 26

கடும் காற்று, கடற் கொந்தளிப்புக் காரணமாக பருத்தித்துறையில் கப்பலில்இருந்து பொருள்கள் இறக்கும் வேலை தொடர்ந்து தடைப்பட்டுள்ளது.

வடக்குக்காக உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றி வந்த 'ஹபரண' 'மாஹோ', 'குமண' ஆகிய கப்பல்கள் காங்கேசன் துறையில் தற்சமயம் தரித்து நிற்கின்றன.

நிலைமை சீரடையும் பட்சத்தில் முன்னுரிமை அடிப்படையில் 'ஹபரண' கப்பலில் இருந்து பொருள் இறக்கப்படும் என்றும் —

அதையடுத்து அக் கப்பல் திருகோணமலைக்கு சென்று ஒரு தொகை மாவை எடுத்து வர ஏற்பாடாகியுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை —


யாழ். மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணப் பொருள்களுடன் 'கோமாரி' கப்பல் எதிர்வரும் 28ஆம் திகதி வடக்கு நோக்கி புறப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-15-3-4)

மன்னாரில் புலிகள் நடமாட்டமாம்

## தள்ளாடி முகாமில் படை உஷார் நிலை!

மன்னார், தள்ளாடியில் உள்ள படையினர் உஷார் நிலையில வைக்கப்பட்டுள்ளனர் என கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மன்னாரில் பெரும் எண்ணிக்கையில் விடுதலைப் புலிகள் போராளிகள் நடமாட்டம் காணப்படுவதாக இராணுவத்தின் புலனாய்வு அறிக்கைகள் தெரிவித்ததைத் தொடர்ந்தே படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ-எ)



மாவீரர் நாளையொட்டி சுன்னாகம் சந்திக்கு அண்மையில் கந்தரோடை வீதியில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் ஆலயத்தை படத்தில் காணலாம்.

## செப்ரிசீமியா 2 குழந்தைகள் நேற்று மரணம்

செப்ரிசீமியா நோயின் தாக்கத்திற்குள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று இரண்டு குழந்தைகள் உயிரிழந்தனர்.

குருநகரைச் சேர்ந்த ரஞ்சன் ஒரேன்லியா (வயது 1), சுதுமலையைச் சேர்ந்த சனகேந்திரராசா கார்த்திபன் (வயது 10 மாதம்) ஆகிய இரு குழந்தைகளுமே மரணமாகினர். (இ15)

## புலிகள் குறித்து இந்திய அமைச்சர்

விடுதலைப் புலிகள் தமிழகத்தை தமது தென்புறதளமாக தற்போது பயன்படுத்தி வரக்கூடும். எந்த நேரத்திலும் 'தங்கள்' நடவடிக்கையை அவர்கள் தீவிரப்படுத்தலாம் என்பதால் மத்திய அரசு உஷாராக இருப்பதாக மத்திய இணை அமைச்சர் ராஜேஸ் பைலட் தெரிவித்துள்ளார். (இ-3)

## யாழ். இளைஞர் சென்னையில் கைது!

சென்னை, நவ 26

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள எதிரிகளில் ஒருவரான கனகசபாபதி (வயது 75) சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ள சென்னை மருத்துவமனையின் வளவில் நடமாடியதாகக் கூறப்பட்ட இரு இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜீவாமுரளி (வயது 26), சிறிதரன் (வயது 24) ஆகியோரே அவர்கள் என்று ''தஐலண்ட்'' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

சாலி கிராமத்தில் இவர்கள் இருவரும் தங்கியிருந்தனர். விருகம்பாக்கம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

ராஜீவ் கொலை விசாரணை:

## கைதான தமிழர் - பொலீஸ் இந்தியா அனுப்பப்பட்டனர்

கொழும்பு, நவ. 26

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணைகளில் சாட்சியமளிப்பதற்காக தமிழர் ஒருவரையும் ஏழு பொலீஸாரையும் இலங்கை அரசு இந்தியாவுக்கு அனுப்பியுள்ளது'

உத்தியோகபூர்வ வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பிரஸ்தாப தமிழர் ராஜீவ் காந்தி கொலையின் முக்கிய சந்தேக நபர்களின் திருமணப் பதிவுகளை செய்தவர் என்றும் — கடந்த புதனன்று அவர் தமிழ் நாட்டுக்கு கொண்டு செல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-ஐ-3-6)



மாவீரர் நாளையொட்டி சுன்னாகத்தில் அமைக்கப்பட்டுள்ள அலங்கார வளைவை முதலாவது படத்திலும்—
கொக்குவில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்துக்கு முன் அமைக்கப்பட்டுள்ள அலங்கார வளைவை இரண்டாவது படத்திலும்—
கொக்குவில் இந்து விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள மாவீரர் ஆலயத்தை மூன்றாவது படத்திலும் —காணலாம்.
— படங்கள்:- எஸ். ராஜ்குமார், பி. தவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நாவற்குழி, அமுதா வீதியில் அரசாங்க நெற் களஞ்சியத்திற்கு முன்பதாக ஆறு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. இல. 47, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (33888)

பூச்சி நீக்கப்பட்ட பெண் (பிறவுண்) பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: றோசாத் தோட்டம், நலங்காவல் பிள்ளையார் கோயில் அருகில், திருநெல்வேலி கிழக்கு. [33884]

அடைவைக்கக்கூடிய நல்லின கோழி முட்டைகள், வான்கோழி முட்டைகள், மற்றும் இதரை வாழைக் குட்டிகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33890)

### விற்பனையாகிறது

மெய்கண்டான், சிவம் கலண்டர், பெரியதும், சிறியதும், அச்சிடும் கலண்டர்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். கலண்டர்கள் அச்சிட்டும் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-9633)

### தவறிவிட்டது

19-11-94 சனி நல்லூர் திவ்யஜீவனசங்கமண்டபத்தில் நிறையக் கற்களுடன் கூடிய ஓர்க்கிட் மலர் அமைப்புள்ள புறோச் தவறிவிட்டது. (மண்டபத்திற்கும், அரியாலை, கொழும்புத்துறைக்கும் இடையில்) கண்டெடுத்தவர்கள் கொழும்புத்துறை உதயன் செய்தியாளர் திரு. சி. சி. வரதராசா, இல. 131 (395), கொழும்புத்துறை வீதியில் ஒப்படைக்கவும். (33885)

## O/L '94

பரீட்சைக்காக எல்லா பாடங்களிலும் மாதிரி பயிற்சி வினாத் தாள்கள் விடைகளுடன் பெற்றுக் கொள்ளலாம்.

அதிக பிரதிகள் எடுப்பவர்களுக்கு 25% கழிவுண்டு

**BOND**
கல்வி நிறுவனம்
58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். [8031]

### விசேஷ கழிவு

இலகு தோசை மா, இட்டலி மா, அப்பம் மா ஆகியவற்றை எம்மிடம் மொத்தமாகக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் முன்கூட்டியே ஒழுங்குசெய்து விசேஷ கழிவைப் பெற்றுக்கொள்ளுங்கள். தொடர்பு: சகல அண்ணா தொழிலக கிளைகளிலும். (சி-9597)

### றேடியோக்கள் திருத்துநல்

சகல கசட்றேடியோக்கள், T.V., டெக், கார் கசற்றுக்கள் மற்றும் ஓட்டோமற்றிக் எலெக்ரொனிக் மேசை, கவர், கைக்கடிகாரங்களை சிறந்த முறையில் திருத்திக் கொள்ள டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 286, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (வானவில் அருகில்). கிளை: கண்டி றோட், சாவகச்சேரி மாவிட்டபாய், ஆனைக்கோட்டை. (சி-9616)

### பெற்றுக்கொள்ளுங்கள்

நீரிழிவு நோயாளருக்கெனப் பாவிக்கக்கூடிய ஆட்டாமா, குரக்கன் மா, ஒடியல் மா, வறுத்த உழுந்துமா, பச்சை உழுந்து மா தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். பெற்றுக்கொள்ளுமிடங்கள்: அண்ணா கோப்பிக் கடைகளான யாழ்ப்பாணம், திருநெல்வேலி, இணுவில் கடைகள். (சி-9631)

---

வடமாகாண
பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் சமாசம்

## மாவீரர்கள் நினைவாக

(அ) அஞ்சலிகள் போதாது அணி அணியாய் அவர் வழியில் துஞ்சாது போராட துணி
(ஆ) தாயகத்தோடு சங்கமமே யாகிவிட்ட தூயவர்கள் மாவீரர் துதி.
(இ) தன்னுயிரில் மேலாக தாயகத்தை நேசித்த மன்னவர்கள் மாவீரர் மதி
(ஈ) அன்னையர்க்கு ஆயுதப் போராகுமோ என்றன்று சொன்னவரைப் பழித்தாள் எம் சோதரி
(உ) எஞ்சியுள்ள பணியனைத்தும் எடுத்தலே மாவீரர் அஞ்சலிகள் ஆகும் அறி.
(ஊ) வேங்கை அணியல்லாமல் வேறெவரும் இல்லையென்று ஓங்கட்டும் இங்கிருந்தோர் குரல்
(எ) பெற்றவரைப் போன்றே மாவீரர் பெற்றோரை பற்றோடு பேணுதலே பணி
(ஏ) பிறந்தாலும் மாவீரர் போலப் பிற. வாழ்ந்திங்கு இறந்தாலும் அவர் போல இற.

### அறிவித்தல்

எமது உரிமைகளை வென்றெடுக்க தமது உயிர்களைத் தற்கொடையாக்கிய மாவீரர் நாள் நவம்பர் 27 இல் எமது நிறுவனங்கள் விற்பனை நடவடிக்கைகளை நிறுத்தி கோட்டமட்ட மாவீரர் நிகழ்வுகளில் அங்கத்தவர், பணியாளர், மகளிர் குழுக்கள் கலந்து கொண்டு மாவீரர் மாண்பினை நினைவில் கொள்வோமாக.

தலைவர்,
வடமாகாண பனை தென்னை வள அபி. கூட்டுறவு-நிறுவனங்களின் சமாசம்.

[சி-9740]

---

மாவீரர்கள்
## சுதந்திரத்தின் சிற்பிகள்

உயிரை உரமாக்கி விடுதலைப்
பயிரை வளர்த்தவர்கள்
வரலாற்றைக் குருதியால் எழுதிப்
புலர் போற்றச் செய்தவர்கள்
இறப்புக்களை வர்த்தமுள்ள தாக்கி
மறப்பண்பை வெளிக்காட்டியவர்கள்
போராட்டத்தின் உயிர்மூச்சாய் இருந்து
நிரந்தரமான தேசத்தைக் காணநின்றவர்கள்
இவர்கள் அபூர்வமான மனிதப் பிறவிகள்
அசாதாரண சக்தி படைத்தவர்கள்
இவர்களை வாழ்த்துவோம்; வணங்குவோம்
அவர்களின் உணர்வுகளை முன்னெடுப்போம்.

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

உறுப்பினர்களுக்கு:

எம் தேசத்தை நேசித்த மாவீரர் வாரத்தின் இறுதிநாளான 27ஆம் திகதி (ஞாயிறு) வகுப்புகளை நிறுத்தி உங்கள் நிறுவன ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறும் மாவீரர் நாள் விழாவின் எழுச்சியை உலகறியச் செய்யுங்கள்.

— பொதுச் செயலாளர்.

(சி-9743)

---

## கல்வி ஆண்டு-1995

(ஆண்டு 5 தொடக்கம் ஆண்டு 12 வரை)
மாலை சனி, ஞாயிறு வகுப்புகள்

★ தூர இடத்து மாணவர்களுக்கான O/L சனி, ஞாயிறு வகுப்புகள் இரு பிரிவாக நடத்தப்படும்.
பிரிவு I 8-00 a.m. — 2-00 p.m.
பிரிவு II 12 00 — 6-00 p.m.
★ இவ்வருடம் ஆண்டு 9, ஆண்டு 10 தூர இட மாணவர்களுக்கான சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பமாக உள்ளன.
★ அனுமதிகள் யாவும் 20 — 11 — 1994 இருந்து வழங்கப்பட்டு வருகிறது.
★ அனுமதிகளை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

**ஆரம்பம்: 05 - 12 - 1994**
(3-00 p. m.)

(எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படும்)

அதிபர்,
**விக்னா கல்வி நிறுவனம்,**
52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். [சி-9634]

---

திருமறைக் கலாமன்றம்
## கவின் கலைகள் பயிலகம்
**SCHOOL OF FINE ARTS**
புதிய மாணவரைச் சேர்த்தல்-1995

சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு கீழ்க்காணும் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

- மிருதங்கம்
- வாய்ப்பாட்டு
- வீணை
- சித்திரம்
- ஓர்கன்
- நடனம்
- வயலின்
- புல்லாங்குழல்
- கிற்றார்

**விண்ணப்ப முடிவு திகதி: 15-12-94**

வட இலங்கை சங்கீத சபை பரீட்சைக்கு மாணவர்கள் தயார் செய்யப்படுவர். விண்ணப்பப் பத்திரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

அதிபர்,
**கவின் கலைகள் பயிலகம்,**
223, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். [சி-9733]

---

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 20 — 07 — 1984



ஆண்டவன் மடியில்: 20 — 11 — 1989

செல்வி
**சித்திரகலா அமரசேனாதிபதி**
திதி: 26–11–94

கண்ணீர்ப் பூக்கள்

சித்திரா வென்றுனக்கு நாமஞ்சூட்டி
சிறுவயதில் பாசமதை மலைபோல் காட்டி
நித்திரையிற் கூடவுன் நாளினம் கண்டு - நாம்
நெஞ்சிலே பேரின்பம் கொண்டவேளை
பத்திரமாய் நீ வளர்ந்து வந்தபோது
பாதகனாம் விதியரக்கன் பார்வைபட்டு
கொத்தொன்றில் இருந்து மலர் விழுதல் போன்று
குழுவியும் விட்டெம்மைச் சென்றதெங்கே...?

உமது பிரிவால் வாடும்:
ஐயா, அம்மா, ஆசை அண்ணா,
அப்பாச்சி, பெரியப்பா, மாமி குடும்பம்,
பெரியம்மா குடும்பத்தினர்,
உறவினர்கள்.

"சுதர்பவனம்",
[illegible]
தொண்டைமானாறு. (33868)

---

## கல்வி ஆண்டு 1995
Dec. 15இல் ஆரம்பம்

### புதிய அனுமதிகள்

1994 இடைக்காலத்தில் பெயர் நீக்கப்பட்டவர்கள் தகுந்த காரணம் காட்டும் பட்சத்தில் அனுமதிக் கட்டணம் இன்றி சேர்த்துக் கொள்ளப்படுவர். இச் சலுகை நவம்பர் 30 ஆம் திகதி வரை மட்டுமே.

### ஏனைய புதிய அனுமதிகள்

டிசம்பர் 01 முதல் வழங்கப்படவுள்ளன

★ எல்லா வகுப்புகளிலும், மூன்று (03) வெவ்வேறு பிரிவுகளில் இடவசதிக்கு ஏற்ப சொற்ப அனுமதிகள் மட்டுமே வழங்கப்படவுள்ளன.
★ மாணவர்கள் பெற்றோருடன் வந்து அனுமதியைப் பெறுவது விரும்பத்தக்கது.
★ அலுவலகம் ஏழு நாட்களும் இயங்குகிறது.

23வது வெற்றி ஆண்டில்....

EST'D: 1973 REGD' No 7/7993
**The Express Institute**
IRUPALAI - KOPAY

(33389)

---

எமது வணிகர் கழக எல்லைக்குட்பட்ட சகல வணிகப் பெருமக்களுக்கும் யாழ். வணிகர் கழகம் விடுக்கும்

## பணிவான வேண்டுகோள்

மாவீரர் தின இறுதிநாளாகிய நாளை சனிக்கிழமை (26-11-1994) நள்ளிரவு 12-00 மணிக்கு எமது மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் தம் உயிரை தியாகம் செய்த மாவீரர்களுக்கு அஞ்சலியை செலுத்துமுகமாக சகல வணிக நிலையங்களிலும் தீபம் ஏற்றி அஞ்சலியை செலுத்துமாறு சகல வணிகப் பெருமக்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

அன்று மாலை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொள்ளுமாறு சகல வணிகர்களையும், ஊழியர்களையும், பொதுமக்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

தலைவர்,
யாழ். வணிகர் கழகம்.

(சி-9746)

---

யாழ். மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை
(மருதனார்மடம்)

## ஆண்டு 6 அனுமதி - 1995

★ மேற்படி வகுப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
★ சாதாரண விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: **15 · 12 · 94**

— அதிபர்
யா/ மகாஜனக் கல்லூரி

(சி-5746)

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 20 — 11 — 1935



மறைவு: 09 — 11 — 1990

**அமரர் மாரிமுத்து துரைராசா**
திதி: 26—11—1994

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! எம்மைவிட்டு ஆண்டுகள் நான்கு சென்றாலும் உங்கள் உருவமும், நினைவுகளும் எம்மை விட்டு பிரியவில்லை எனும் நினைவுடன் வாழ்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கும்:

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர், சகோதரிகள்.

இல. 5, இரண்டாம் ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம். (33895)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## ஆணைக்குழுக்கள்

புதிய அரசாங்கம் ஒன்று பதவிக்கு வந்ததும், பழைய அரசாங்கம் — பதவியில் இருந்த அரசாங்கம்— செய்த தவறுகளை வெளிக் கொணர்ந்து மக்களுக்கு அம்பலப்படுத்துவதும், சம்பந் தப்பட்டவர்களை அரசியல் பழிவாங்குவதும் வழக்கம்.

முந்திய அரசின் குறைபாடுகளை, ஊழல், மோசடிகளை அம்பலப்படுத்துவதன் மூலம் தமக்கு அரசியல் லாபம் தேடுவதும் புதிய அரசில் அங்கம் வகிப்போரின் நோக்கமாக இருந்து வருகிறது.

பழைய அரசாங்கத்தின் "லஞ்சத்தை"களை வெளிக் காட்டுவதிலும், அவற்றை நீக்குவதிலுமே புதிய அரசின் பதவிக் காலத்தின் இரண்டொரு வருடங்கள் கழிந்து விடும். இதனால் புதிய அரசு தனது ஆற்றல், திறமை, ஆளுமைகளை முழு வீரியத்துடன் பயன்படுத்தி மக்களுக்கு நலம் விளைக்க முடிவதில்லை.

அந்த வகையில் புதிதாகப் பதவிக்கு வந்த சந்திரிகா அரசும் முந்திய அரசின் தவறுகளை வெளிக்கொணர முனைந்திருக்கிறது. பல விடயங்களை விசாரிக்க முடிவு செய்து நடவடிக்கை எடுத்து வருகிறது. ஒரே கட்சியின் ஆட்சி பதினேழு வருடங்கள் நீடித்து இருந்தமையால் விசாரிக்க வேண்டிய விடயங்களின் பட்டியல் நீண்டிருக்கிறது.

அந்த நீட்டோலையில் முன்னைய ஆட்சியாளர்கள் செய்த மோசடிகள், ஊழல்கள், பெற்ற லஞ்சம், அரசியல் பழிவாங்கல் என்பனவற்றோடு அரசியல் படுகொலைகள், ஆட்கள் காணாமற் போனமை அரசியல் தலைவர்கள் மற்றும் படைத் தலைவர்களின் படுகொலைகள் ஆகியனவும் சேர்ந்துள்ளன.

இத்தனை விவகாரங்களையும் விசாரிக்கவும், ஆராயவும், அறிக்கை சமர்ப்பிக்கவும் என்று பல ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட உள்ளன. இவ் விசாரணைகளுக்கெனப் பல கோடி ரூபா செலவாகும். மக்களின் பணத்தில் இந்தளவு பெரும் தொகையைச் செலவிட்டு, பெறப்படும் பயன் மிகக் குறைவாகவே இருக்கும்.

பொதுமக்களைப்பொறுத்த வரையில் விசாரணைக் குழுக்கள் தெரிவுக்கும் முடிவுகள் அல்லது சிபார்சுகளின் அடிப்படையில் நஷ்டஈடு அல்லது நிவாரணம் ஏதாவது கிடைக்கும். அவ்வளவு தான். அதற்கு மேல் அரசியல்வாதிகள், ஆட்சியாளர்கள்தான் தமது அரசியல் எதிரிகளை செல்வாக்கு இழக்கச் செய்து லாபம் காண்பார்கள்.

இந்த விசாரணைகள் நடைபெற்று முடிந்து சம்பந்தப்பட்டவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டாலும், புதிய அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள்முந்தியவர்கள் செய்த தவறுகளை அல்லது குற்றங்களை திரும்பவும் செய்யாமல் இருப்பார்கள் என்றாலாவது பரவாயில்லை.

முதல் பதவியில் இருந்தவர்கள் செய்த தவறுகளை, குற்றங்களைப் புதியவர்கள் மறுவடிவங்களில் இயற்றுவது தான் இதுவரை வழக்கமாக இருந்து வருகிறது. சந்திரிகா தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பதவிக்காலம் முதுமை அடையும்போது அதன் "அழுக்கு"கள் தெரியவரும்!

எனவே ஆட்சிக்கு ஆட்சி கொள்கை மாறுவது போல, அரசுகள் மாற, மாற ஆணைக்குழுக்கள் வைப்பதனை நிறுத்தி, அரச கட்டில் ஏறும் போது அறநெறிகள், மனிதப் பண்புகள், மனு நீதிகள், தவறாமல் மக்களுக்கும் நாட்டுக்கும் உழைப்பது என்ற மனப்பக்குவம் அரசியல்வாதிகளுக்கு வளர வேண்டும். அரசியல என்பது சுயநலம் அல்ல. தனது வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும், தன்னைச் சார்ந்தவர்களினதும், தனது ஆதரவாளர்களினதும் முன்னேற்றத்துக்கும் உழைப்பதல்ல. பொதுமக்களின் நலனுக்கும் முன்னேற்றத்துக்கும் நாட்டின் வளர்ச்சிக்கும், வளத்துக்கும் உழைப்பதே அரசியல்.

அரசு, சகலரும் நாட்டு மக்களே என்று கருதி எல்லோரையும் சமமாகக் கொண்டு செயற்பட்டால் ஆணைக்குழுக்கள் தேவைப்படா.

# படுவான்கரைப் பகுதி மக்களை வெளியேறுமாறு ராணுவம் உத்தரவு

## படை நடவடிக்கைக்கு ஆயத்தம்

மட்டக்களப்பு, நவ. 26

மட்டக்களப்பு படுவான் கரைப் பகுதி வயல் வாடிகளில் தங்கியுள்ள பொது மக்களை வேறு இடங்களுக்குச் செல்லுமாறு இராணுவத்தினர் உத்தரவிட்டுள்ளனர்.

படுவான் கரைப் பகுதி மட்டக்களப்புக்கு மேற்கே காடும் வயலும் சார்ந்த விஸ்தீரணமான ஒரு பிரதேசமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பகுதியில் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளவே படையினர் மக்களை ஒரு வார காலத்துக்கு வெளியேறிச் செல்லுமாறு உத்தரவிட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

இது இவ்வாறிருக்க, மட்டக்களப்புப் பகுதிகளில் தேடுதல், சுற்றி வளைப்புக்கள் மீண்டும் மிகவும் அதிகரித்துக் காணப்படுகிறது. தமிழர்கள் கண்டபடி கைது செய்யப்பட்டு முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

கைது செய்யப்பட்ட பலர் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட எம். பி. யோசப் பரராஜசிங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. (ஓ)

## சைவ நெறி வகுப்புகள்

கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றத்தின் ஆதரவில் பிரதி ஞாயிறு தோறும் முற்பகல் 9மணிக்கு மன்றப் பணிமனையில் சைவ நெறிப் பாட வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

# கடமையை ஒழுங்காகச் செய்யாத ஆசிரியர் இடமாற்றம் செய்யப்படுவர்

## உடுவில் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் எச்சரிக்கை

வலிகாமம் தெற்கு, நவ. 26

வகுப்புகளுக்கு ஒழுங்காகச் சென்று தமது ஆசிரியப் பணியைச் சரியாக செய்யாத ஆசிரியர்களும், அதிபருடன் நிர்வாக வேலைகளிலும் பாடசாலை அபிவிருத்தியிலும் ஒத்துழைக்காத ஆசிரியர்களும் அடுத்த வருடம் இடமாற்றம் செய்யப்படுவர்.

உடுவில் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா மேற்படி கோட்ட அதிபர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் இவ்வாறு கூறியுள்ளார்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற அதிபர்கள் கூட்டத்தில் அவர் இதனை தெரிவித்தார்.

அடுத்த வருடம் நிர்வாக ஆண்டாக விளங்க உள்ளதாகவும் —

அதிபருடன் நிர்வாக கடமைகளில் ஒத்துழைக்காத ஆசிரியர்களின் பெயர் விவரத்தை தருமாறும் —

அவ்வாறான ஆசிரியர்களை இடமாற்றம் செய்ய தாம் நடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் திரு. இரத்தினராசா தெரிவித்துள்ளார்.

நிர்வாக ஆண்டில் அதிபர்கள் தமக்குரிய கடமைகளையும் அதிகாரங்களையும் சரியாகப் பயன்படுத்த வேண்டும். அதிபரின் அனுமதியின்றி பாடசாலை வளாகத்தினுள் எவரும் செல்லவோ பாடசாலையை விட்டு வெளியேறவோ கூடாது.

ஆசிரியர்களை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது அதிபரின் கடமை எனவும் அவர் தெரிவித்தார். (ஓ-152)

# எம் வரலாற்று நாயகர்களை பூசிப்போம் போற்றிடுவோம்

எமது தமிழீழத் தேசிய மண் மீட்புப் போர், ஒவ்வொரு "மாவீரரினதும் பெறுமதி மிக்க உயிர் ஈகையினாலேயே வெற்றிக் கம்பத்தை நோக்கி நகர்த்தப்படுகின்றது. இம் மாவீரர்கள் தங்கள் உயிர் ஈகையை பல வடிவத்திலே நம் தமிழ்த் தேசத்திற்காக, தமிழ் மக்களுக்காக அர்ப்பணிக்கின்றனர்.

தரைப் புலியாக, கடற் புலியாக, கரும்புலியாக மாறி தம் இனிய உயிர்களை கொடையாக்குகின்றனர். இவர்கள் தன்னலம், தன் குடும்பநலம் ஆகியவற்றை முற்றாக நிராகரித்து தேச நலம், மக்கள் நலம் ஆகியவற்றுக்கே முன்னுரிமை கொடுத்து வாழ்பவர்கள்.

இவர்கள் மடிந்தும் மறையாதவர்கள், மறைந்தும் மறக்கப்பட முடியாதவர்கள். எமது நெஞ்சங்களிலும், இல்லங்களிலும் இருத்தி பூசிக்கப்பட வேண்டியவர்கள். ஏனெனில் ஒரு மனிதனால் எந்தவொரு நோக்கத்திற்காகவும் கொடையாக வழங்க முடியாதது உயிர் ஒன்றே! அந்த இனிய தன்னுயிரை எங்கள் ஒவ்வொருவருக்காகவும் ஈகையாக்கும் இவர்கள் வணங்கப்பட வேண்டியவர்கள்.

சமகாலத்தில், எமது வாழ்வுக் காலத்திலேயே ஏட்டிலோ.. பாட்டிலோ... கற்பனைக் கதைகளிலோ இருந்து அறியாது எம் கண் முன்னாலேயே எமக்காக தம் உயிரை ஆகுதியாக்கும் இவ் வீரர்கள் நம் தேசத் தலைவனின் "உயிரினும் மேலானது சுதந்திரம்" என்ற உயர்ந்த தத்துவத்தை வேதமாக ஏற்று இலட்சியப் போராட்டத்தை முன்னெடுப்பவர்கள்.

ஸ்ரீலங்கா பேரினவாதப் படைகள் எத்தனை மெருகூட்டலில் படை எடுத்தாலும் முறியடிக்க முடியும் என உறுதிதரும் இவர்களின் நினைவாக நிறுவப்பட்டுள்ள மாவீரர் ஆலயங்களுக்கு சென்று மலரஞ்சலி செலுத்துவது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

கார்த்திகை 27 ஆம் நாள் விடியலில் 12 மணி ஒரு செக்கனுக்கு ஆலயமணிகள் நினைவொலி எழுப்ப 12 மணி 02 நிமிடத்திற்கு எம் இல்லங்கள், பாடசாலைகள், தொழிற்கூடங்கள், பொது அமைப்புகள், அலுவலகங்கள் அனைத்து இடங்களிலும் மாவீரர் சுடரேற்றி நமது தாயகம் நமதாக உறுதி பூணுவோமாக!

வட பிராந்திய
சிகை அலங்கரிப்பாளர்
சங்கங்களின் சமாசம்
(ஒன்றியம்)



## நல்லை நகர் நாவலர்

தமிழுக்கும், சைவத்துக்கும் புத்துயிர் அளித்த ஆறுமுகநாவலரின் குருபூசை கார்த்திகை மாதத்து மக நட்சத்திர தினமாகும். அதனை ஒட்டி நாவலர் குறித்து அறிஞர்கள் தெரிவித்த கருத்துக்கள் இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன.

நல்லைநகர் நாவலர் வந்திலரேல்
சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே - எல்லவரும்
ஏத்து புராணாகமங்கள் எங்கே
ஆத்த னறிவெங்கே அறை

— சி. வை தமோதரம்பிள்ளை.

ஆரூரனில்லைப் புகலியர் கோனில்லை யப்பனில்லை
சீருரு மாணிக்க வாசகனில்லை திசையளந்த
பேருரு மாறுமுக நாவலனில்லை பின்னிங்கியார்
நீருரும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கும்
நீர்மையரே

— உடுப்பிட்டி சிவசம்புப்புலவர்.

சகத்திடைக் கோயிலாக்கும் தரணியன்
நாளும் நாண
அகத்திடைக் கோயிலாக்கி அரனையுமதற்கு
என்றே
புகுத்திடு மன்பான் மிக்குபூசலார் புரிந்த
தொண்டே
இகத்திடைப் புரியுமேந்தல் இன்று
நாவலனே யன்றோ

— தத்துவஞானி நல்லூர் இராமச்சந்திரபுலவர்.

நீறுமணி கண்டிகையும் நேர்போன அஞ்செழுத்தும்
விறுமணி யாகக் கொண்டவர் யார் அம்மானை
விறுமணி யாகக் கொண்டவர் தாம் நல்லூரின்
ஆறுமுக நாவலர் என்றாய்ந் திவாய் அம்மானை
அவர் தம் புகழ்பாடி ஆடுதுங்காண் அம்மானை

— இடைக்காடு கவிமணி பண்டிதர் இராமசாமி.

நாவலர் ஓர் இந்து லூதர்.

மாட்டின்லூதர் கிறித்து சமயத்தில் சீர் திருத்தம் கொண்டு வந்தது போல இந்துசமயத்தில் நாவலர் திருத்தம் கொண்டு வந்தார்

— சேர், பொன் இராமநாதன்.

தொகுப்பு:
இடைக்காட்டூர் திருமதி மங்களேசுவரி
பாலசுப்பிரமணியம் (பி.ஏ)

## சுவாமி பிரேமானந்தா:

# இலங்கைப் பொலீஸாரும் விசாரணை நடத்தும்

கொழும்பு, நவ. 25

திருச்சி மாவட்டம் ாத்திமா நகரில் உள்ள பிரேமானந்தா ஆச்சிரமத்தின் ஸ்தாபகர் சுவாமி பிரேமானந்தாவுக்கும், தமிழ் போராளிகளுக்கும் இடையே தொடர்பு இருப்பதாகக் கூறப்படுவது பற்றி இந்தியாவிடமிருந்து தகவல்கள் பெற்று விசாரணை நடத்தப்படும்.

— இவ்வாறு பொலீஸ்மா அதிபர் பிராங் டி. சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாகப் பெறப்படும் தகவல்களை ஆராய்ந்து புலன் விசாரணை மேற்கொள்ள அரசு விரும்புகிறது எனவும் பொலீஸ் மா அதிபர் சொன்னார்.

சுவாமி ஸ்ரீ பிரேமானந்தா இந்திய குற்றப் புலனாய்வுப் பொலீஸாரால் கடந்த 19ஆம் திகதி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே

முன்னதாக சுவாமி ஸ்ரீ பிரேமானந்தா புலிகளின் ஆன்மீகத் தலைவர் என இந்தியாவின் அதிரடி அரசியல்வாதி டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி குற்றஞ் சாட்டியிருந்தார்.

(4-ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் குரல் வானொலியில்

26 — 11 — 1994
சனி இரவு

★ 8-01 — மாவீரர் வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி— இ. இராஜேஸ்வரன் எழுதிய "மாவீரர் இலட்சியங்கள் மாண்டு விடாது"
★ 8-25 —நேயர் கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — சித்திரம்— ந. கிருஷ்ணா எழுதிய "மங்களத்திருநாள்"
★ 9-00 — மணிமுதல் 12-30 மணிவரை மாவீரர் தின சுடரேற்றும் வைபவத்தை யொட்டி விசேட ஒலிபரப்பு
★ 12-30 மணிக்கு விசேட ஒலிபரப்பு நிறைவு பெறும்.

27 — 11 — 1994
ஞாயிறு காலை

★ 7-02 — மாவீர வணக்கம்.
★ 7-15— களத்தில் மலர்ந்தவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்.
★ 7-40 — மாவீரர் வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி— இ. இராஜேஸ்வரன் எழுதிய "சுவடுகளில் தடம் பதிப்போம்"
★ 8-00மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## ப.நோ. சங்கத்தில் சிமெந்து விற்பனை

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம் அதன் கிளைகளின் ஊடாக சிமந்து பைக்கற்றுக்களை விநியோகித்து வருகின்றது.

பங்கீட்டு அடிப்படையில் சிமெந்து பைக்கற் ஒன்று 650 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. (ஓ-17)

## ஒத்திவைப்பு

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கத்தால் ஞாயிறு தோறும் யாழ். இந்து கல்லூரியில் நடத்தப்பட்டு வரும் மத்தியஸ்தர்களுக்கான பயிற்சி வகுப்பு மாவீரர் தினம் காரணமாக இவ்வாரம் நடைபெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஞாயிறு முதல் வகுப்புகள் வழமைபோல் நடைபெறும். (ஓ 20)

## மலசல கூடம் அமைப்பு

வடமராட்சி, நவ. 26

பொதுமக்களின் வசதி கருதி தும்பளை கிழக்கு உதய சூரியன் சனசமூக நிலையத்துக்கு அருகில் பருத்தித்துறை நகரச. பயால் நீரடைப்பு மலசல கூடம் ஒன்று அமைக்கப்பட்டு பாவனைக்கு விடப்பட்டுள்ளது. (ஓ-173)

## நாற்பதாம் அகவை காணும் நாயகன் தலைவன் வாழி!



நித்தமும் அலைகள் மோதி
சுத்திடும் மண்ணின் ஓரம்
நித்திரை யின்றி வானம்
நீர்மழை சொரியும் நேரம்,
சித்திரை நிலவாய் மண்ணில்
உதித்தநம் அண்ணன், தமிழை
காத்திடப் பிறந்தோன் எம்மை
காப்பவன் தலைவன் வாழி!

அடிமைகள் நாமா...? எம்மை
அடக்கிட லாமா...? என்றே
கொடுமைகள் செய்த பகையை
கொளுத்திட எழுந்த வேங்கை!
குடிக்கோர் இளைஞர் களத்தில்
குதித்தனர்; அண்ணன் கையை
பிடித்தனர்; பகைவர் கதையை
முடித்தனர்; தலைவன் வாழி!

நாற்பதாம் அகவை காணும்
நாயகன் தலைவன்! போரில்
தோர்ப்பதே அறியான் வீரத்
தோளினை உடையோன் தமிழர்
பிறப்பினில் செய்த பயனாய்
பெற்ற இச் செல்வம்! எம்மை
இறப்பினி லிருந்தே மீட்கும்
இணையிலாத் தெய்வம்; வாழி!

— வேலணையூர் சுரேஷ்.

## காலத்தின் பெருந்தலைவன்

அருளுடைய விழிகளொடு கனிவுதரு மொழிகளொடு
நெகிழுகின்ற இதயத்தின் ஆழத்தின் –
கருணை யொடு
பெருந்துயரங் களைந்துவிடும் பேராண்மைத் –
திறத்தி னொடு
பேரிடரு ளாழ்ந்துவிட்ட தமிழினத்தின் –
காவலனாய்
மருவிவரு மெதிரிபடை அதிரடியிற் சரிந்தழிய
மண்டியிட்டு உரிமைகேட்ட காலத்தையே –
மாற்றிவிட்டு
குருதியிடை நடைபயின்று ஆயுதங்கள் பறித்தெடுத்து
உலகினையே கலக்குகின்ற காலத்தின் –
பெருந்தலைவன்!

பெற்றவரை, வளர்த்தவரைப் பிரிந்துவிட்ட -
குழந்தைகளின்
அன்னையாகி அரவணைத்து முத்தமிட்டு –
மகிழவைத்து
நற்றவத்தின் முத்துக்களாய் மலர்ந்து நிற்கும் –
மழலைகளை
வளர்த்தெடுக்கும் பெரும்பணியைச் செயலாக்கும்–
மதிவளத்தால்
விற்பனராய்த் தொழில்நுட்பக் கலைஞர்களாய் –
மண்ணைக் காக்கும்
சாதனைகள் படைக்கின்ற சந்ததியை
வளர்த்தெடுக்கும்
அற்புதங்கள் படைத்துயர்ந்து அவனியையே –
திகைக்கவைக்கும்
சற்குணனாம் பிரபா காலத்தின் பெருந்தலைவன்!

"மாரீசன்பிள்ளை"

## சுடர்வீசித் தினம் வாழ்கவே!

தமிழீழத் தாய்மாரின் தவப்புதல்வா – என்றும்
தளராத மனங்கொண்ட தனித்தலைவா– கண்
இமையாது மண்காக்கும் எம்புத்திரா – ஈழ
இதயங்களில் வாழும் பிரபாகரா!

ஒருதாய்க்குப் பலமகன்மார் உலகிலுண்டு – ஆனால்
பலதாய்மார்க் கொருமகனாம் உன்னைக்கண்டு-
உன்
திருநாளில் உனைவாழ்த்த எண்ணங்கொண்டு –
நின்றோம்
திசையாவும் ஒளிவீசும் உந்தன் தொண்டு.

நூற்றாண்டு பாராண்டு நீ வாழ்கவே – நோய்
நொடியின்றி இன்பத்தில் நீ ஆழ்கவே – பெரும்
பேறாக நாம்பெற்ற அருஞ்செல்வமே – உந்தன்
பெயர்போலச் சுடர்வீசித் தினம் வாழ்கவே.

— மனோன்மணி நடராசா

## ஒரு தமிழ்த் தலைமை

கற்பனை கடந்த ஆற்றல்;
கண்ணியம் கடமை நேர்மை
பொற்புறு சாந்தம் மாண்பு;
பொலிவுறு அன்பு பண்பு;
முற்றிடும் முயற்சி ஊக்கம்
முகிழ்த்திடும் அறிவு ஞானம்;
பற்றிடும் மானம் ஓர்மம்;
பாங்குறு நீர்மை சால்பு;
உற்றிடும் உறவு கேண்மை;
உயர்தனிக் கருணை ஈகை;
சுற்றிடும் இரக்கம் ஈய்வு;
துணிவொடு தூய்மை வாய்மை;
ஒற்றிடும் மேன்மை நுட்பம்;
ஒருதமிழ்த் தலைமை ஏற்ற
அற்புதக் கோலம் அம்ம!
அதுபிர பாவின் தோற்றம்.

— முருகனடியான

## ஒளி வீசி வாழியவே!

தமிழ்மண்ணை மீட்கவென்றே
தரணியிலே உதித்த உந்தன்
தளராத உறுதி கண்டு
தருக்குற்றோம் தமிழர் நாம்
அமிழ்தான எம் தலைவா
அகங்குளிர வாழ்த்துகிறோம்
ஒருநூறு ஆண்டுகள் நீ
ஒளிவீசி வாழியவே.

— க. லோகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபை

## பதவி வெற்றிடம்

1. கணக்காளர் — 104 / 10

1.1 வயதெல்லை 25 தொடக்கம் 40 வரை

1.2 கல்வித்தகைமைகள்.

அ. கூட்டுறவு ஊழியர் 11வது சம்பளத்திட்டத்தில் கணக்குப் புத்தகங்கள் பேணுதல் அல்லது கணக்கு வைத்தல் அல்லது கணக்காய்வாளர் வேலையில் மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது 12ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப்புத்தகம் பேணுதல், க/கு ஆய்வாளர் வேலையில் ஆறுவருட அனுபவம்.

அல்லது

ஆ. ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் புத்தகங்கள் பேணுதல், பரீட்சை இறுதித் தேர்வு சித்தியடைந்து ஓர் வியாபார நிறுவனம்/ கைத்தொழில் நிறுவனத்தில் கணக்குப் புத்தகங்கள் பேணுதல்/ கணக்காய்வாளர் வேலையில் மேற்பார்வை மட்டத்திலான இரண்டு வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் புத்தகங்கள் பேணுதல், இடைநிலைத் தேர்வில் சித்தியுடன் ஒரு வியாபார நிறுவனம்/ கைத்தொழில் நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்கள் பேணுதல்/ கணக்கு ஆய்வாளர் வேலையில் மேற்பார்வை மட்டத்தில் நான்கு ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க. பொ. த. உயர்தரம் சான்றிதழ் பரீட்சையில், கணக்கியல் பாடம் உட்பட மூன்று பாடங்களில் சித்தியுடன் ஒரு வியாபார நிறுவனம் அல்லது கைத்தொழில் நிறுவனத்தில் கணக்குப்புத்தகங்கள் பேணுதல், கணக்காய்வாளர் வேலையில் மேற்பார்வை மட்டத்தில் ஆறு ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம்.

1.3 வேதனம்

ரூபா 1305 — ரூபா 2005
40 X 5 — 50 X 10

(அத்துடன் கூ. வே. ஆணைக்குழு சட்டப்படி இதரபடிகளும் வழங்கப்படும்)

2. எழுதுநர் தரம் (302/15)

2.1 வயதெல்லை 20 தொடக்கம் 40 வரை

2.2 கல்வித்தகைமைகள்.

அ. கூட்டுறவுப் பணியாளர் 16ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுநர் பதவியில் இரண்டு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. க. பொ. த. (சாதாரண) தரத்தில் இரு அமர்வுகளிற்கு மேற்படாமல் 6 பாடங்களில் சித்தியடைந்து அதில் தூயகணிதம்/வர்த்தக எண்கணிதம்/எண்கணிதம் இவற்றில் ஒன்றிலும், தமிழ்மொழி/சிங்களமொழி ஒன்றிலும் உள்ளடக்கி 5 திறமைச்சித்திகளுக்கு குறையாதவர்.

2.3 வேதனம்

1030 — 1355
20X10 — 25X5

(கூட்டுறவுப் பணியாளருக்கு வழங்கப்படும் சகல படிகளும் வழங்கப்படும்)

விண்ணப்ப முடிவு திகதி: 02— 12— 1994

3. விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

மாவட்ட செயலாளர்
யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை
இல 15, சிறாம்பியடி லேன்.
யாழ்ப்பாணம்

4. அனைத்து சான்றிதழ்களினதும் பிரதி இணைக்கப்பட வேண்டும்.
5. நிறுவனங்களில் கடமைபுரிவோர் நிறுவன தலைவர்களின் சிபார்சுகளுடன் நிறுவனத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
6. கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை தகைமை விலக்களிக்கப்பட்டுள்ளது.
7. விண்ணப்பப்படிவங்களையும், விவரங்களையும் ரூபா 10/-செலுத்தி வேலை நாட்களில் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
8. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சபையினால் கோரப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.

மாவட்டச் செயலாளர்,
யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை,
யாழ்ப்பாணம்.

(சி/9741)

## நெஞ்சில் நீங்காத ஆறாம் ஆண்டு வீர அஞ்சலி

### 2ஆம் லெப். சூரியகுமார் (சூரி)

பிறப்பு: 31 — 03 — 1965
வீரச்சாவு: 26 — 11 — 1988

யாழ்ப்பாணம் காரைநகர் வாசியும், முன்னாள் முறிகண்டியான் வைத்தியசாலை ஸ்தாபகரும் காலஞ்சென்ற டாக்டர் கணபதிப்பிள்ளை அவர்களின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற க. மகாலிங்கசூரியர்–கனகேஸ்வரி அவர்களின் சிரேஷ்ட புதல்வனும், வீர வேங்கையுமாகிய

2ஆம் லெப். சூரியகுமார் (சூரி)

காரைநகரில் இந்திய இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார். இவருக்கு எங்கள் வீர அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இந்நாளில் பிரார்த்திக்கின்றோம்.

நீங்காத நினைவுகள்:
குடும்பத்தினர்.

சூரியர் வளவு,
தங்கோடை, காரைநகர்.

(33889)

உ

## மணிப்புரி முருகன் ஆலயம்

கொழும்புத்துறை கிழக்கு, மணியம்தோட்டம்

## அலங்கார உற்சவம் - 1994

## 1 ஆம் திருவிழா

மாலை 4.00 மணிக்கு:
கும்பாபிஷேகத்துடன் பூசைகள் ஆரம்பமாகும்

மாலை 5.30 மணிக்கு:
தெய்வீக அருளுரை

**"கந்தனே கலியுகத்தின் கண்கண்ட தெய்வம்"**

எனும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு

நிகழ்த்துபவர்:

**திரு. கா. கணேசதாசன் அவர்கள்**
(ஓய்வுபெற்ற அதிபர், கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்)

அனைவரும் முருகப்பெருமானின் அருளைப் பெற அழைக்கிறோம்.

உபயகாரர்
திரு. மு. கார்த்திகேசு
மணிப்புரி

(33897)

## (கப்) மெழுகுதிரி

பல மணி நேரம் எரியக் கூடிய (கப்) மெழுகு திரி விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. தொடர்பு கொள்க.

கண்ணன் கிதை,
112 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/9738)

## ஆண்டு 6 அனுமதி-1995

யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்
யாழ்ப்பாணம்

ஆண்டு 5 புலமைப்பரிசில் சித்தியடைந்தோருடன், (ஆண்டு-5) பெறுபேறுகளின் அடிப்படையிலும் மாணவர்கள் அனுமதிக்கப்படுவர். அனுமதி பெறவிரும்பும் சகல மாணவர்களும் கல்லூரியில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுப் பூரணப்படுத்தி **02-12-1994** இற்கு முன் அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.

— அதிபர்.

[33894]

## கண்ணீர் அஞ்சலி

### ஆறுமுகம் முத்துக்குமாரு

(இளைப்பாறிய தபால் ஊழியர்)

எமது கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினர் 24-11-94 இல் காலஞ்சென்ற, ஆ. முத்துக்குமாரு அவர்களின் மரணச்செய்தி கேட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினருக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

அங்கத்தவர்கள் அனைவரையும் காலை 10 மணிக்கு சாஸ்திரியார் ஒழுங்கை அரியாலையில் இடம்பெறும் இறுதிக் கிரியையில் பங்கு கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.

அஞ்சல் தொலைத் தொடர்பு
இளைப்பாறிய சேவையாளர்
நலன்புரிக் கழகம்

(33896)

## 31 ஆம் நாள் நினைவு தினமும் நன்றி நவிலலும்



மண்ணில்: 09 — 09 — 1920

விண்ணில்: 27 — 10 — 1994

### அகஸ்ரின் அந்தோனிப்பிள்ளை
(ஐயாத்துரை)

சிரித்த முகம் சிந்தனை ததும்பும் விழிகள்
அன்பும் அமைதியும் ஆட்கொண்டவரே!
எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தினீரே
உம்பிரிவால் எம் விழிநீர் இன்றும்
ஆறாய்ப் பாய்கின்றதையா

அன்னாரின் ஆத்ம சாந்தித் திருப்பலியிலும் நல்லடக்கத்திலும் கலந்து கொண்ட அருட்சகோதரர், அருட்சகோதரிகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

[illegible]

117/2, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

[illegible]

# சென்னை செல்லும் இலங்கையர் பொலீஸ் அறிக்கை பெறவேண்டும்

## தங்குமிடங்களிலும் கெடுபிடிகள்

கொழும்பு, நவ. 26

சென்னைக்குச் சென்றடையும் இலங்கையர் அனைவரும் அங்கு போய் இறங்கியதும் பொலீஸாரிடமிருந்து 'கிளியரன்ஸ்' அறிக்கை பெற்றுக் கொள்ளவேண்டும் என்று பணிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹோட்டல்கள், விடுதிகள் முதலியன இலங்கையருக்கு தங்குமிட வசதிகள் அளிப்பதற்கு முன்னர் பொலீஸாரின் அறிக்கைகளையே கேட்பதாக சென்னையில் இருந்து கொழும்பு ஆங்கிலத் தினசரி 'த ஐலண்ட்'டின் செய்தியாளர் சுரேஷ் முஹம்மது அறிவித்துள்ளார்.

இலங்கையரிடமிருந்து பொலீஸ் அறிக்கைகளைப் பெற்றுக்கொண்ட பின்னரே அவர்களுக்கு தங்குமிட வசதி அளிக்கவேண்டும் என்று ஹோட்டல், விடுதிகளின் உரிமையாளர்களுக்கு பொலீஸார் உத்தரவிட்டுள்ளனர்.

ஹோட்டல் மற்றும் விடுதிகளில் உள்ள விருந்தினர் பதிவேடுகளையும் பொலீஸார் அடிக்கடி சென்று பரிசோதிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-எ)

## இன்று நள்ளிரவில்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நினைவுக் கல்லறைகளுக்கும், நினைவுக்கற்களுக்கும் மக்கள் திரண்டு சென்று அஞ்சலி செலுத்துவர்.

பொது இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நினைவாலயங்களில் நாளை முழுவதும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும்.

மாவீரர்களின் நினைவாக பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் குடாநாடெங்கும் நாளை நடைபெறவுள்ளன. மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் வைபவங்களும் இடம்பெறும்.

மாவீரர் நாள் நினைவுப் பொதுக் கூட்டங்கள் மாவட்டரீதியாக நாளை பிற்பகல் இடம்பெறும். (இ-ஐ)

## ஆறுமுக நாவலர் குருபூசை

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் குருபூசையை ஒட்டி யாழ். பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள ஸ்ரீபரமேஸ்வரன் ஆலயத்தில் இன்று காலை 8 மணிக்கு விசேட பூசை இடம்பெறும். யாழ்.பல்கலைக் கழக இந்து மன்றம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இதேவேளை - நாவலர் குருபூசையை ஒட்டிய விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. துணைவேந்தர் பேராயர் க.குணரத்தினம் பிரதம விருந்தினராக அதில் கலந்து கொள்வார். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும்.

## யாழ்.இளைஞர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொலீஸ் நிலையத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்திருந்த அவர்களிடம் செல்லுபடியாகக் கூடிய பாஸ்போட் மற்றும் ஆவணங்கள் இருந்தன.

இவர்கள் கைது செய்யப்பட்டது பற்றி இரகசியப் பொலீஸாரின் "கியூ" பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-எ)

## இலங்கைப்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுவாமி பிரேமானந்தா யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பதால் வேண்டுமென்றே இப்படி ஒரு குற்றச்சாட்டை அவர்கள் பரப்பியிருக்கலாம் என்றும் —

வெளிநாட்டைச் சேர்ந்த சுவாமி ஒருவர் தமிழகத்தில் ஆசிரமம் நடத்தி மக்கள் மதிப்பைப் பெறுவதனை விரும்பாத சக்திகளும் இத்தகைய குற்றச்சாட்டுகளைப் பரப்பி இருக்கலாம் என்றும் — அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர். (அ-ஐ-க)

## மாவீரர்,....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்னரும் மாவீரர் துயிலும் இல்லத்துக்குள் அனுமதிக்கப்படுவர்.

★ கோப்பாய் இராச பாதையில் சைக்கிள் மற்றும் வாகன தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சகலரும் தமது வாகனங்களை அவ்விடங்களிலே நிறுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

★ வாகனங்கள் நிறுத்தப்படும் வீதிகளை ஒரு வழிப் பாதையாக மட்டும் பயன்படுத்தவேண்டும்.

★ மாவீரர்களின் பெற்றோர்கள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட பாதையூடாக துயிலும் இல்லத்துக்குள் செல்லலாம். துயிலும் இல்ல நுழைவாயிலில் அமைந்துள்ள அலுவலகத்தில் அவர்கள் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

★ மாவீரர்களின் பெற்றோர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகளைக் கவனிப்பதற்காக செல்வபுரம் சனசமூக நிலையத்தில் அலுவலகம் ஒன்று செயற்படும். பலாலி வீதி மற்றும் கணேசலிங்கம் (அன்ஸன்) வீதி வழியாகவே அவர்கள் அழைத்துச் செல்லப்படுவர்.

மேற்படி ஒழுங்குகளை சகலரும் கடைப்பிடித்து மாவீரர் நாள் நிகழ்வின் புனிதத்தைப் பேண ஒத்துழைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாவீரர் நாள் நினைவுக் கூட்டம்

27.11.94 மாலை 3.00 மணிக்கு இலுப்பையடிச் சந்தியிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி, யாழ். மருத்துவ பீட மைதானம் வந்தடைந்து மாலை 4.30 மணிக்கு கூட்டம் ஆரம்பமாகும். இதில் அனைத்துத் தொழிலாளர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

யாழ். ஜி. பி. எஸ்.
தொழிலாளர் கூட்டுறவுத் தொழிற் சங்கம்
லிமிற்றட்

(8035)

## சுண்டிக்குளி மகளிர் கல்லூரி (VOCATIONAL TRAINING INSTITUTE)

வருடாந்த மனைப்பொருளியல்

### கண்காட்சி

காலம்: 30 நவம்பர் 1, 2 டிசம்பர்
நேரம்: காலை 9 மணி — மாலை 5 மணி

— அதிபர்.

[சி-9732]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி. இராயப்பு றோசம்மா

சில்லாலை தெற்கு சென். ஜேம்ஸ் வீதியைச் சேர்ந்த திருமதி இராயப்பு றோசம்மா 24 - 11 - 94 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை இராயப்புவின் அன்பு மனைவியும், காலம் சென்ற திரு. திருமதி றேமூந்துப்பிள்ளை தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்றவர்ளான பார்பரம்மா, சீமாம்பிள்ளை. கத்தரினம்மா, மாக்கிரேட், மற்றும் சந்தியாப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், புஸ்பம், ராணி, பேபி, அருட்சகோதரி ஜெம்மா (திருச்சிலுவை கன்னியர் மடம் யாழ்ப்பாணம்), வீலா, பரமானந்தம் (பஞ்சரட்ணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பிலிப்பையா, இம்மனுவல், ஸ்ரீபன், சின்னத்தம்பி (தார்சீசியஸ்), அல்வீன் (பபா) ஆகியோரின் அன்பு மாமியாரும், பபா, ரதி, றெஜி, பபி, அருட் சகோதரி டொறின் (திருக்குடும்ப கன்னியர்மடம் யாழ்ப்பாணம்) ரவி, விஜி, கிறேசியன், ஓமின், வுளோறின், லைங்ஸ்ரன், கிளிண்ரன், சுஜி, றஜோ, ஜெனி, ஜெகன் ஜெலோன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக் கிரியைகளுக்காக இன்று(26– 11– 94)காலை 9 மணிக்கு அன்னாரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி பூசையின்பின்னர் பண்டத்தரிப்பு புனித யாகப்பர் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பரமானந்தம் (பஞ்சரட்ணம்)
[மகன்]
எட்வேட் பங்கிராஸ்
[பேறாமகன்]

(சி/9747)

### சின்னத்தம்பி வைரமுத்து

அச்செழு மத்தியைச் சேர்ந்த மலாயன் பென்சனியர் சின்னத்தம்பி வைரமுத்து நேற்று (25-11-94) மாலை 7 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும், கந்தசாமி (கடவுள்), பெரியதம்பி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தண்டிகைநாச்சியார் (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), தேபேந்திரா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தீபாகரி, ரஜிதாகரி, நிருபன், மயூரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பாட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 26- 11- 94 சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று, அச்செழு ஆரவாரபுலம் குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல்:
கந்தசாமி
[மகன்]

'மலாயன் லொட்ச்'
அச்செழு.

[33899]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற் லிமிற்றெட்டினால்) யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 26—11—94 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org